# அரசு அனுப்பிய கடிதம் புலிகளால் நிராகரிப்பு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 14 இதழ் 49
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-3-1995

## வெரித்தாஸ் தகவல்

(கொழும்பு) இனட்பிரச்சனை தீர்வுக்கான அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பது சம்பந்தமாக அரசாங்கம் அனுப்பிய கடிதத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டதாக வெரித்தாஸ் நேற்று தெரிவித்தது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன் இனப்பிரச்னை தீர்வுக்கு அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பது சம்பந்த (4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று பங்களாதேஷ் பயணம்!

(புதுடில்லி) இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இன்று இந்தியாவிலிருந்து பங்களாதேசுக்கு தமது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

தற்போது இந்தியாவில் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி இன்று பகல் 12-50 மணிக்கு புதுடில்லியிலிருந்து விசேட விமானத்தில் தமது குழுவினருடன் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவுக்கு செல்கின்றார். இம்மாதம் 30ம் திகதிவரை பங்களாதேஷில் தங்கியிருக் (4ம் பக்கம் பார்க்க)

### அரசியலுக்கு புதியவரான

# சந்திரிகாவால் விடுதலை புலிகளை புரிந்துகொள்ள முடியவில்லை

## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

''ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அரசியலுக்கு புதியவர். இதனால் விடுதலைப்புலிகளையும் அவர்களது சிந்தனைகளையும் அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை'' விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான 'சன்டேலீடருக்கு' வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது விடுதலைப் புலிகளின் பேட்டியில் தெரிவித்துள்ளதாவது: ஜனாதிபதி சந்திரிகா அரசியல் வாதிகள் அல்லாதவர்களையே பேச்சுவார்த்தைக்காக இங்கு அனுப்புகின்றார். போராட்டம் பற்றியோ அல்லது விடுதலைப் புலிகள் பற்றியோ வாலாற்று அனுபவம் எதுவும் இன்றி வெறுமனே சந்திரிக்காவின் விசுவாசிகளாக மட்டுமே இவர்கள் உள்ளனர். (4-ம் பக்சம் பார்க்க)

## சந்திரிகா — ராவ் பேச்சில்

### பிரபா விடயம் இடம்பெறவில்லை

### அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

(புதுடில்லி) இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கும், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரனை நாடு கடத்துவது குறித்து ஆராயப்படவில்லை என இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய விசேட பேட்டியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் எந்தக் கட்டத்திலும் விடுதலைப் புலி (4ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் புதிய சம்பளம் மே மாதம் வழங்கப்படும்

(கொழும்பு) ஆசிரியர்களுக்கான அதிகரித்த சம்பளம் எதிர்வரும் மே மாதம் முதல் வழங்கப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

நிவித்திகலையில் அண்மையில் இடம்பெற்ற மாணவர் சீருடை விநியோக வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (4ம் பக்கம் பார்க்க)

### இன்று புறப்படவிருந்த

## அமைச்சர் குழுவினர் யாழ் விஜயம் பின்போடப்பட்டது

(கொழும்பு) அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவின் தலைமையில் இன்று யாழ்ப்பாணம் வரவிருந்த விசேஷ குழுவின் விஜயம் திகதி எதுவும் அறிவிக்கப்படாமலேயே பின்போடப்பட்டதாக பி.பி.ஸி. நேற்று தெரிவித்தது.

வடபகுதியைப் புனரமைப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் நியமிக்கப்பட்ட தக்கது, விஷேட செயலணிக்குழு இது இந்தக் குழுவின் தலைவர் என்பது இங்கு குறிப்பிடத் (4-ம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட

## விதவைகள், இளைஞர்க்கு தொழில் பயிற்சி

(கொழும்பு) வடக்கு-கிழக்கு பகுதிகளில் வன்செயலினால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் வேறுவகைகளில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் ஆகியோருக்கு அச்சுக்கோர்ப்பாளர்களாக பயிற்சிவழங்க வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

மூன்று வருட காலத்திற்கு (4ம் பக்கம் பார்க்க)

## பிராந்தியக் கமிஷன் கேட்டு மலையகத் தமிழர் கோரிக்கை

[கொழும்பு) மலையகத் தமிழ்மக்களுக்கு தனியான பிராந்திய கமிஷன் ஒன்று அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்றத் (4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி மட்டு. விஜயம்

(கொழும்பு) இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டீ சில்வா நேற்று முன்தினம் மட்டக்களப்பிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இராணுவத் தளபதியின் விஜயத்தை முன்னிட்டு முக்கிய வீதிகள் எங்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் முக்கிய இடங்களில் சோதனை (4ம் பக்கம் பார்க்ச)

## புலிகள் - அரசு பேச்சுக்கள் இலங்கை இந்திய உறவை பாதிக்காது

— சந்திரிகா பேட்டி

]புதுடில்லி] விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இந்திய-இலங்கை உறவுகளை எந்தவிதத்திலும் பாதிக்கமாட்டாது என இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இந்திய தொலைக்காட்சி தூரதர்ஷனுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்குமாறு எந்தவித வேண்டுகோளும் இந்திய தரப்பிலிருந்து விடுக்கப்படவில்லையென றும் தெரிவித்தார். (சு-இ)

## பேச்சுக்கள் பயன் தந்துள்ளன

(புதுடில்லி) ''இலங்கை அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்குமிடையில் (4ம் பக்கம் பார்க்க]

## கமக்காரர் அறிமுக அட்டை மீளப் புதுப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட வட்டச் செயலகத்தினரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டைகள் 1995 ம் ஆண்டுக்கான மீள புதுப்பித்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இந்த கமக்காரர் அறிமுக அட்டைப் பயன்பாட்டை நன்கு அறிந்து அவற்றின் பயன்களை கடந்த காலங்களில் அனுபவித்த விவசாயிகள் அவற்றை புதுப்பித்தலில் ஊக்கமாக ஈடுபட்டுவருகிறார்கள்.

## பனந்தோப்புகளில் ஊடுபயிர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வாணிப் பகுதியில் உள்ள பனந்தோப்புகள் பலவற்றில் கௌபி விளைவிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது ஆய்வுக்குழுவினர் இவ் ஊடுபயிர்ச் செய்கையை பார்வையிட்டனர்.

90நாள்பயிரான கௌபியை ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விதைத்து தை, மாசி மாதங்களில் அறுவடை செய்யப்படுவதாகவும் விதைக்கப்படும்போது பசளைகள் இடாமலே விதைக்கக்கூடியதாக உள்ளதாகவும் இச்செய்கை மூலம் நல்ல விளைச்சல்பெற்று பெருமளவு இலாபம் பெறுவதாகவும் இச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-28**

**செவ்வாய் இரவு**

8-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8-10 அறிந்துகொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
8-20 நலந்தானா - "வயிற்றில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு" - வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய சுயமுயற்சி
08-50 மலரும் மொட்டுக்கள்

**1995-03-29**

**புதன் காலை**

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-28**

**செவ்வாய் மாலை**

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 தமிழிசை
5-30 வானொலி மதியூகம் - 14
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 இவ்வாரம் இவர்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6 20 என்தெரிவு
6 30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## பற் சிகிச்சை பெறுவோர் பாதிப்பு

(நல்லியடி)

மந்திகை மருத்துவ மனையின் பற் சிகிச்சை நிபுணர் நீண்ட நாள் விடுமுறையில் சென்றிருப்பதனால் வைத்திய சாலைக்கு பற் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளும் பாடசாலை மாணவர்களும் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். -160

## பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்திய சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டியில் மாவட்டத்தில வென்றவர்களுக்கான பரிசளிப்பும், கோட்டங்களில் வென்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஏப்ரல் 9-ம் திகதி பி. ப 3 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இது சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறாத சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் இராமகிருஷ்ணாலய பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அறிவுறுத்தலை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## சுயதொழில் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழ் தொழில் வாய்ப்பின்றி இருக்கிற குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்து முகமாக நாவற்குழி லவனிதா குடியிருப்பில் வாழும் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதற்கென கிராமிய உற்பத்திக்குழுஊடாக ஒருவருக்கு தலா 5000/- வீதம் கடன் வழங்குவதற்கென ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாடு வளர்ப்புக்கு ஊக்குவிப்பு கடன்

(யாழ்ப்பாணம்)

விலங்கு வளர்ப்பை ஊக்குவிக்குமுகமாக தாவடிப்பகுதியிலுள்ள 3 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கிராமிய நிதியத்தின் மூலம் மாடு வளர்ப்புக்கென ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளனர்.

நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப்பகுதியினூடாக அண்மையில் தாவடி தெற்கு கிராமிய நிதியத்தினூடாக இக் குடும்பங்களுக்கு 9000 ரூபாவீதம் கடன்கள் வழங்கப்பட்டன.

இப்பகுதியில் முன்னரும் ஐந்து குடும்பங்களுக்கு மாடுகள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது,

## அதிபர்கள் இடமாற்றம்

(நெல்லியடி

புலோலி தெற்கு புற்றளை மகாவித்தியாலயத்தில் சுமார் 7 மாத காலம அதிபராகப் பணிபுரிந்த செல்வி அ. கனகரத்தினம் கடந்த மாதம் முதல் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வடஇந்து கல்லூரியில் பல வருடகாலம் அதிபராகப்பணிபுரிந்த திருமதி லோ. குமாரசாமி அண்மையில் ஓய்வுபெற்றதையடுத்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடஇந்து மகளிர் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு அதிபரான திருமதி இந்திரராசா கடந்தமாதம் முதல் புற்றளை மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றலாகியுள்ளார். - 160

## மரக்கன்றுகள் நடுகை

[யாழ்ப்பாணம்[

கோண்டாவில் பகவான் கிராமத்தில் நடாத்தப்பட்ட கிராமிய பாசறை நிகழ்வின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உற்பத்திக்குழுப் பகுதியினரால பல இன மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்குள்ள கோழிகளுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் ஆனைக்கோட்டை முள்ளிக்கிராமத்தில் நடைபெற்ற கிராமியப் பாசறை நிகழ்வில் வைத்தும் இவ்வாறு பல மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன் கோழி நோய் தடுப்பூசிகளும் போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பயிர்ச்செய்கைக் கடன்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ பொருணமிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கிராமிய நிதியத்தினூடாக அண்மையில் கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த 184 விவசாயிகளுக்கு மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன,

கிராமிய உற்பத்திக் குழு ஊடாக வழங்கப்பட்ட இக் கடனுதவியில் ஒரு பயனாளிக்கு 10,000 ரூபாவீதம் மொத்தம் பதினெட்டு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதுதவிர வடமராட்சி கிழக்கு கொடுடாவில் பகுதியைச் சேர்ந்த 17 பயனாளிகளுக்கும் 10,000 ரூபாவீதம் ஒரு லட்சத்து பதினேழாயிரம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டையிலுள்ள குபரன பாலர பாடசாலையில குழந்தைகளின் போஷாக்கு மேம்பாட்டுக் கருந்தரங்கொன்று நடைபெற்றது.

ஆசிரியை செல்வி அப்பையா இராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சுகாதாரக் கல்வி போதனாசிரியர் க. வைத்தீஸ்வரன் உரையாற்றினார். 71

0 0 0

(மானிப்பாய்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி இன்ரறக்ட் கழகம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து கடந்த 10ம திகதி முதல் 12ந் திகதிவரை 3 நாள் பயிற்சி நெறியினை நடாத்தியது.

அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் பாடசாலை மணடபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது

இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 71

0 0 0

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு பாடசாலை ஆசிரியர்களுக்கான நாடகப்பட்டறைக் கருத்தரங்கு அண்மையில் தாளையடி றோ. க. பாடசாலையில் ஐந்து தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. 160

0 0 0

(யாழ்ப்பாணம்)

போஷாக்குக் குறைவான கற்பிணித் தாய்மார்களுக்கான கருத்தரங்கொன்று அண்மையில் சங்கானை அ. மி த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட கற்பிணித் தாய்மார்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். 160

# செய்திச்சிதறல்

## வீதி சீர்கேடு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி — பருத்தித்துறை வீதி நுணாவில் சந்தியிலிருந்து கரவெட்டி வரை ஒரே குண்டும் குழியுமாக காட்சி தருகின்றன.

இவ்வீதியைத் திருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இப்பகுதி பொதுமக்கள் தொடர்புகொண்டு கோரியுள்ளனர். — 154

## பதிவுசெய்யக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிப் பிரிவில் வாடகைச் சேவையில் ஈடுபடும் பதிவுசெயயாத மோட்டார் கார்கள் அனைத்தும் ஏப்ரல் மாதம் 6 ம் திகதிக்கு முன்னதாக யாழ் மாவட்ட வாடகை மோட்டார்கார் சேவைச் சங்கத்தில் பதிவுசெய்து சேவையிலீடுபடுமாறு வடமராட்சி வாடகை மோட்டார்கார் சேவைச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வாகீசர் முதலாமிடம்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் வாகீசர் இல்லம் முதலாம் இடத்தையும் மாணிக்கர் இல்லம் இரண்டாம் இடத்தையும் சம்பந்தர் இல்லம் மூன்றாம் இடத்தையும் சுந்தரர் இல்ல ம்நான்காம் இடத்தையும் பெற்றுச் கொண்டன. 71

## முகாமையாளர் நியமனம்

(நெல்லியடி)

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் புதிய பொது முகாமையாளராக திரு. சு. கணபதிப்பிள்ளை அணமையில பணிப்பாளர் சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். -160

## பிரிவுபசார விழா

[மானிப்பாய்]

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பயிற்சியாளர்களாக சில காலம் பயிற்சி பெற்று இம்மாதம் முதலாம் திகதியுடன் பயிற்சி நிறைவு பெற்றுச் செல்வதை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச நலன்புரிச் சங்கம் பிரிவுபசாரம் ஒன்றினை நடாத்தியது. -71

## தடகள போட்டி

[தாழையடி)

ஆழியவளை சீ. சீ. த. க. வித்தியாலய வருடாந்த இல்ல தடகள போட்டி அண்மையில் செம்பியன்பற்று சென் பிலிப் நேரீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் திரு. து. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. -163

## சுந்தரர் இல்லம் முதலாமிடம்

(நெல்லியடி)

புலோலி புற்றளை மகாவித்தியாலய மெய்வல்லுநர்போட்டி அதிபர்திருமதி ச. இந்திராணி தலைமையில் நடைபெற்றது.

367 புள்ளிகளைப்பெற்று சுந்தரர் இல்லம் முதலாமிடத்தையும் 307 புள்ளிகளைப் பெற்று அப்பர் இல்லம் இரண்டாம்இடத்தையும் 275 புள்ளிகளைப் பெற்று சம்பந்தர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்று கொண்டன. 160

## சித்திரக் கண்காட்சி

[நெல்லியடி]

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களின் சித்திரக்கண்காட்சி அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் செ. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு க. சிவராஜா கண்காட்சியை திறந்து வைத்தார். 160

## குழாய்க் கிணறு அமைப்பு

]கொழும்புத்துறை)

மானிப்பாய் அதிகாரி செல்லமக்கு மைதானத்தில் குழாய்க்கிணறு ஒன்றும் அதற்கான தண்ணீர் தொட்டியும் கடந்த மாதம் தேச நிர்மாணிகளால் அமைக்கப்பட்டுள்ளன. -154

## கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

சங்கானை தபால் அலுவலக கட்டிடத்தின் பின்பகுதியில் கடந்த இரண்டரை வருடகாலமாக இயங்கி வரும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தை மீண்டும் பண்டத்தரிப்பு பகுதியில் செயற்பட ஒழுங்கு செய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. 72

## புனர்வாழ்வுக்கழக அலுவலகம்

(கொழும்புத்துறை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் ஒன்று பளை பிரதேச செயலாளர் திரு. எஸ். செந்தில்நந்தனால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. 154

## மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா அடுத்த மாதம் 7-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் கலந்துகொள்வார்.

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி இ. நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. -54

## மேய்ச்சல் தரைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அரியாலை மத்தி வடக்கு உற்பத்திக்குழு, மேய்ச்சல் தரைத் திட்டத்தை செயற்படுத்திவருகிறது. இத்திட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மாடுகளின் உரிமையாளர்கள் பங்காளிகளாக இருந்து பயனடைந்து வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் மாடுகள் பசும் புல் தரைகளுக்கு மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்று மேய விடுவதனால் இவற்றின் நாளாந்தம் தீவனத்துக்காக உரிமையாளர்கள் செலவிடும் பணத்தில் மூன்றில்இரண்டுபங்கை மிச்சப் படுத்துவதுடன் மேலதிகமாக பாலைக்கறவை செய்யக்கூடியதாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

மணிவாக்கு

ஒருவன் பல்லாண்டுக் கணக்காய் செலுத்தி வந்து கொண்டிருக்கும் அன்பை, பகைமை ஒரு கணத்தில் போக்கிவிடும்

எட்கார் ஆலன்மோர்

# ஜே. வி. பி.யின் நடவடிக்கை தெற்கில் அதிகரித்துவருகிறது

[கொழும்பு]

தெற்கில் ஜே. வி. பி யின ரின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக பொலிசாரின் அறிக்கைகள் கூறுகின்றன:

கடந்த சில வாரங்களாக தெற்கில் பல பகுதிகளிலும் ஜே. வி. பி நபர்கள் என கருதப்படுவோரால் பல கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடாத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலபகுதிகளிலுமிருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகள் மற்றும் இராணுவத் தளபாடங்களும் மீட்கப்பட்டுள்ளனவாம். இவை முன்னர் ஜே. வி பி யினரால் நிலத்துள் புதைத்து வைக்கப்பட்டு தற்போது அவர்களினல் மீட்டுப் பயன்கடுத்த வைக்கப்பட்டிருந்தபோதே பொலிசாரினல் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் தற்போது தலைமறைவாகியிருப்பதால இவர்கள் தாம் கொண்டு சென்ற ஆயுதங்களுடன் ஜே. வி, பியினருடன் இணைந்திருக்கலாம் எனவும் அஞ்சபடுகிறது.

மீண்டும் ஜே. வி பி தமது போராட்டத்தை ஆரம்பிக்குமானல் படையினர் பெரும் இக்கட்டான நிலையை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படுமெனவும் படை வட்டாரங்கள் கூறியுள்ளன. வடக்குக் கிழக்கில் சமாதானம் தோன்றுதொரு நிலையில் ஜே. வி. பியும் போராட்டத்தைத் தொடக்கினல் அதனல் நாடு மீண்டும் போர்ச் சூழ்நிலைக்குத் தள்ளப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. -சி

## நமது நோக்கு

### பேச்சு எதற்கு?

இலங்கை இனப் பிரச்சனைகுத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு யாரிடம் இருக்கிறது?

இத் தருணத்தில் இக் கேள்வி அதிமுக்கியமாகி விட்டது.

ஏனெனில் - இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதே முக்கிய முதற்பணி எனக் கூறி ஆட்சிக்குவந்த ஜனதிபதி இன்று அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகிருரா? அந்தப் பொறுப்பை யாரிடமும் பகிர்ந்தளித்துவருகிருரா?

ஹைதராபாத்தில் இந்தியப் பிரதமரோடு இனப் பிரச்சனைபற்றிப் பேசி இருக்கிருர். இனப்பிரச்சனைத் தீர்விற்கான பொறுப்பின் ஒரு பகுதியைப் பங்கிட்டு அளித்துள்ளாரா?

பிரதமராகிவிட்ட சந்திரிகா அம்மையார் தடை நீக்கம் பற்றி அறிவித்தார்

ஆனல் - பூரணமாக அதை நிறைவேற்றத் தனதுஅதிகாரம்போதாது என்ருர். முழு அதிகாரத்தையும் பெற்றிட ஜனதிபதித் தேர்தலிற் போட்டியிட்டார்.

பல இனமக்களும் அவருக்கு வாக்களித்து அதிகாரம் அளித்தார்கள். தடை நீக்கம் பூரணமாக அமுல் நடத்தப்படும் என மக்கள் நினைத்தார்கள்.

ஆனல் நடைமுறையில் அவரது அதிகாரம் செல்லாக்காசாகிவிட்டதா?

இந்தச் சந்தேகம் எழும் விதத்தில் அமைச்சர் பீரிசின் விளக்கம் அமைந்துள்ளது. வடபகுதிக்குப் பொருட்கள் சென்றடைவதில் ஏற்பட்ட தடைகளை நீக்கும் முகமாகப் பாதுகாப்புப் படையினருடன் அரசு தரப்பினர் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என அவர் அறிவித்துள்ளார்.

அப்படியாயின் இனப் பிரச்சனைகள் பற்றிப் பேசித் தீர்வு கண்டபின் அத்தீர்வை நடைமுறைப் படுத்தப்படையினருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளதா?

அன்ருடப் பிரச்சனைகள் பற்றிய சில கட்டளைகளை அரசு இட்டபோதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லையாயின் அதிகாரம் யாரிடம் உள்ளது என்ற சந்தேக விஞ மக்களிடம் தோன்றுவது நியாயமானதே?

எனவே தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் ஸ்திர நிலை ஏற்படும் வரை பேச்சுகள் எதற்கு?

## பயிலுநர் தாதிமார் பயிற்சிக்கு மேலும் 1,200 பேர் தெரிவு

(கொழும்பு)

மற்றுமொரு தொகுதி பயிலுனர் தாதிமார் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்காக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 1,200 பேருக்கு கொழும்பு, களுத்துறை, காலி, இரத்தினபுரி, பதுளை, கண்டி, குருநாகல், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள தாதிமார் பாடசாலைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தமிழ் முஸ்லிம் தாதிமார் மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெறுவார்கள். சுகாதார அமைச்சர் பௌஸி அண்மையில் கிரான் ஆஸ்பத்திரிகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தாதிமாருக்கு கடும் பற்ருக்குறை நிலவுவதை அறிந்து கொண்டார்.

இந்தப்பற்ருக் குறையை நீக்குவதற்கு மேலும் பலருக்கு தாதிமார் பயிற்சி அளிக்கப்படவுள்ளது, அடுத்த தொகுதி பயிலுனர் எதிர் வரும் செப்ரெம்பர் மாதமளவில் தெரிவு செய்யப்படுவார்கள். [சி]

## ஆந்திராவில் கண்ணிவெடி 9 காங்கிரஸ் உறுப்பினர் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம்சக்திவாய்ந்த நிலக்கண்ணி வெடி ஒன்றில் ஜீப் வண்டியொன்று சிக்கியதில் அதில் சென்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் 9 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தக் கண்ணிவெடியை, அச்சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர் ஒருவரே வைத்ததாகக் கூறப்படுகிறது.

உள்ளூர் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அவரது மூன்று புதல்வர்களும் அவருடைய ஆதரவாளர்கள் நால்வருமே இச்சம்பவத்தில் கொல்லபபட்டவர்களாவர்.

இச்சம்பவத்தை அடுத்து ஆந்திராவின் பல பகுதிகளிலும் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் சில பகுதிகளில் தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்களுடன் கைகலப்பில் இறங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## அடுத்த பொதுத் தேர்தலில் பி. ஜே. பி. ஆட்சியை கைப்பற்றும்

[புதுடில்லி]

இந்தியாவில் ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியில் உட்பூசல்கள் அதிகரித்து வருகின்றன. மிகமுக்கியமான 12 மாநிலங்களில் தற்போது ஆளும் கட்சியான காங்கிரஸ் 3 மாநிலங்களிலேயே ஆட்சியில் இருந்து வருவதால் எதிர் வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி தோல்வியைத் தழுவும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் முதல் முறையாக பி.ஜே. பி எனப்படும் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெறறு மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரசிலிருந்து பதவி விலகிய என். டி. திவாரி மற்றும் பதவி நீக்கப்பட்ட அர்ஜுன் சிங் ஆகியோர் பிரதமர் ராவுக்கு எதிராக மிக வேகமாக இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் காங்கிரசின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்டதாகவும் மீண்டும் காங்கிரஸ் மத்தியில் ஆட்சியை கைப்பற்றும் சாத்தியம் மிகக் குறைவாகவே இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -சி

### பலதும் பத்தும்

#### இரத்த சோகை

நமது பகுதியில்........... பெருமளவு பரவியுள்ள நோய்களில் இரத்தசோகையும் ஒன்று. இந்த நோய் ஏற்படுவது ஏன்?

இரத்த உற்பத்திக்கு அவசியமான சத்துணவைத் தேடி உண்ணுது...வாய்க்கு உருசியானது எது என்பதிலேயே கவனம் செலுத்துவது முதலாவது காரணம்.

இரண்டாவது ...... ..உற்பத்தியான இரத்தம் உடலிற் கிரகிக்கப்படாமை. இதற்கான மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும்.

மூன்ருவதாக...... கொக்கிப் புழுப் பெருக்கம். இப்புழுக்கள் அதிகமுள்ள இடங்களில் காலணி இன்றி நடந்தால்......அவை சருமத்தை ஊடுருவிச் சென்று, மனிதரின் சிறு குடல்களில்தங்கி, இரத்தத்தை உறிஞ்சி விடும். எனவே கொககிப் புழு அகற்றும் பூச்சி மருந்துகளும் அவசியமல்லவா?

— மயூரன்

## புதிய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு சமூகத்தின் தேவை கருதி அத் தேவைகளை இனங்கண்டு காலத்துக்குக் காலம் வெவ்வேறு கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் என யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு இணைப்பாளர் திரு. இரா, சிவசந்திரன் தெரிவித்தார்.

பெருமளவுக்கு சாதாரண பொதுமக்களுக்காக கல்விப் பணியாற்றும் எமது அலகின் நடவடிக்கைகளை பொது மக்களே முன்வந்து ஆலோசனை வழங்குவதன் மூலமாகவும், விமர்சிப்பதன் மூலமாகவும் சரியான முறையில் வழிநடத்த வேண்டும்.

சென்ற காலங்களில் எம்மால் நடைமுறைப்படுத்தப் பட்டுவந்த கற்கைநெறிகளுடன் மேலும் பலவகையான புதிய கற்கைநெறிகள் இவ்வாண்டில் அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -162

### செத்தல் மிளகாய் விலை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் கிலோ 80 ரூபாவாக விற்று வந்த செத்தல் மிளகாய் கிலோ 130 ரூபாயிலிருந்து150 ரூபாய் வரை தற்பொழுது விற்கப்படுகின்றது. - 59

எம் மண்ணின் வளம் பெருக
நாம் இங்கு மரம் நடுவோம்

### தொற்றுநோய் பரவுகிறது

(பண்டத்தரிப்பு)

தற்போது நிலவும் கடுமையான வெப்பத்தை அடுத்து வலி மேற்குப்பகுதியில் சின்ன முத்து, பொக்கிளிப்பான் ஆகிய தொற்று நோய்கள் தீவிரமாக பரவிவருகின்றது.

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு சொடுகு, சிரங்கு ஆகிய நோய்கள் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பகுதியினர் தெரிவிக்கின்றனர். 72

### துணிகரத் திருட்டு

(நெல்லியடி)

தனிமையில் வசித்துவரும் வயோதிபரின் வீட்டுக் கதவை பட்டப்பகல் வேளை உடைத்த திருடர் கோஷ்டியினர், அங்கிருந்து கோடாரிகள் கத்திகள் உடுபிடவைகளை எடுத்துக் கொண்டு தலைமறைவானுர்கள்

இத்துணிகர திருட்டுச் சம்பவம் அண்மையில் மந்திகை பஸ் நிலையத்திற்கருகில் மார்க்கண்டு என்பவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது. 160

## இராசி பலன்

28-03-1995

செவ்வாய்ககிழமை

**(தமிழுக்கு பங்குனி-14)**

துவாதசி: முற்பகல் 8-49 வரை, அவிட்டம், சித்த யோகம்: முற்புகல் 7-43 வரை, பிரதோசவிரதம், இராகுகாலம்: மாலை 3-14 முதல் 4·44 வரை, சுபவேளை: காலை 10-44 முதல் 12-14 வரை.

மேடம்: தனப் பிராந்தி, புத்திரர் சௌக்கியம், பயணம்.

இடபம்: காரியசித்தி, தொழில்சிறப்பு, புதிய ஸ்தானம்.

மிதுனம்: வயிற்றில் ரோகம், மனஸ்தாபம், கவலை.

கடகம்: செய்தொழில் பங்கம், நண்பர் விரோதம், அலைச்சல்.

சிங்கம்: கௌரவம், சுபச்செய்தி, வெளியார் உதவி.

கன்னி: வருமானம், இனியஉறவு, தாய்ப்பாசம்.

துலாம்: இன சனப்பகை, காடும் வாதம், மனச்சுமை.

விருச்சிகம்: அதிகாரப் போட்டி, அவப்பெயர், பயந்த நிலை.

தனுசு; பணியாள்நன்மை, மனக்களிப்பு, வேதாந்தம்.

மகரம்: நம்பிக்கைக் குறைவு, பணமுடை, வேலைப் பழு

கும்பம்: விரோதிகளை ஜெயித்தல், உறவினர் உதவி, பொதுப்பணி.

மீனம்; தொழில் கஷ்டம், மனவேதனை, ஆவேசப்பேச்சு.

— ஜோஸ்யர்

### தவக்கால நற்சிந்தனை

''கேடான எதுவும் உனக்கு நேராதபடி இனிப் பாவம் செய்யாதே''

(அரு. 5 : 13)

கேடுகள் எம்மைச் சூழ்ந்துள்ளன. இதனல் பாடுகள் நாம் படுகின்ருேம். இதற்குரிய காரணத்தை மறந்துவிட்டோம். வேதனை நிறைந்த வாழ்வு எமக்கு சோதனையாகிவிட்டது. பாவப் பரிகாரம் ஒன்றுதான் வழி. பாவத்தை விட்டொழித்துப் பரமனைத் தேடுவோம்.

— தா. மைதிலி

யாழ்ப்பாணத்திலிருந்து

# தென்பகுதிக்கு பனங் கள்ளு

(யாழ்ப்பாணம்)

பனங்கள்ளு பைக்கட்டுகளில் அடைக்கப்பட்டு விரைவில் தென் இலங்கைக்கு அனுப்பப்படுமென்று பனைவள அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்கள்ளைப் பைக்கெட்டுகளில் அடைப்பதற்காக ஏழு லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது' இந்த இயந்திரம் விரைவில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் பனம் தும்பையும் உற்பத்தி செய்வதற்கு இரு இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்வுள்ளன. இந்த இயந்திரங்களும் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு. பாக்கியநாதன் தெரிவித்தார். (வி-இ)

## பிரசவத்தின்போது

# இளம் தாய் மரணம்

(நெல்லியடி)

வீட்டில் பெண் சிசுவைப் பெற்ற இளம் தாயொருவர் சில மணி நேரத்தில் அவ்விடத்தில் மரணமானர்.

இப்பரிதாப சம்பவம் நேற்றுக்காலை 8-30 மணியளவில பருத்தித்துறை சுப்பர் மடத்தில் நிகழ்ந்துள்ளது.

சுப்பர்மடத்தில் வசிக்கும் நடராஜா இராசமணி (வயது 32) என்னும் குடும்பப் பெண்மணியே பிரசவ வேளையில் வாயினுல் நுரை தள்ளப்பட்ட சமயம் மரணமானவராவர்.

பிரசவவேளையில் கவனிப்பாரற்ற நிலையில் இப்பெண்மணி இருந்தமையே இதற்குக்காரணமெனத் தெரியவருகின்றது.

இவ் இளம் தாய் பெற்றெடுத்த பெண்சிசு சுகமாக இருக்கின்றது.

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் இப்பயிற்சி நெறியின்போது இவர்களுக்கு சீருடை மற்றும் இதர செலவுகளுக்காக மாதாந்தம் 550 ரூபா வழங்கப்படவுள்ளது.

கனேடிய பல்கலைக் கழகத்தின் நிதிஉதவியுடன் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தின் முன்னேடி நடவடிக்கையாக முதல் கட்டமாக 20 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(க-இ)

## இராணுவத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு ஊழியருடன் முக்கிய மாநாடு ஒன்றை இவர் அங்கு நடாத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து எதுவித தகவலும் நேற்று வரையில் வெளியிடப்படவில்லை. க-இ

# கொள்ளைச் சம்பவத்தில் நான்கு பொலிஸார் கைது

(திருமலை)

கிழக்கில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக நான்கு பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு அண்மையில் மூதூர் நீதிவான் சுவணராஜ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை இம்மாதம் 29ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்,

இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் இருவரும், பொலிசார் இருவரும் மேலும் தேடப்பட்டு வருவதாக பாதுகாப்புப் பிரிவினரின் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட கொள்ளைச் சம்பவம் அம்பலத்திற்கு வந்ததையடுத்து இரு தரப்பினரும் சேர்ந்து வேறு நபர்கள் இக்குற்றத்தைசெய்ய முயன்றதாகவும கூறினர்களாம்.

(க-இ)

# 3100 தே. அ. அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் 3100 அடையாள அட்டைகள் யாழ் செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றில் 2000 அடையாள அட்டைகள் பாடசாலை மூலமும் சாதாரணமாகவும் விண்ணப்பித்தவர்களுக்கு உரியது.300 அடையாள அட்டைகள் புதுப்பிப்பதற்கு விண்ணப்பம் செய்தவர்களினதும் 800 அடையாள அட்டைகள் தொலைந்தவற்றிற்கு பதிலாக விண்ணப்பம் செய்தமர்களினதும் ஆகும்.

இவற்றை அந்தந்த அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் யாழ். ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இப்போது ஈடுபட்டுள்ளனர். -71-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/15336/9.

## ஆசிரியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில்: விரைவில் ஒரு தொகுதி ஆசிரியர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

புதிதாக தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் தாம் நியமனம் பெறும் பாடசாலைகளில் குறைந்தது மூன்று வருடங்களாவது சேவையாற்றவேண்டும்.

குறைந்தளவு லீவு எடுக்கும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படும் அதிபர்களுக்குப் புலமைப் பரிசில் அளிக்கும் முகமாக தற்பொழுது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் ஆங்கிலம், கணிதம் மற்றும் கணனி விஞ்ஞானம் ஆகிய துறைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். -க-இ

## அரசியலுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி,

அத்துடன் அவர்கள் தத்தமது துறைகளில் வல்லுநர்களாகவே இருக்கிருர்கள்.

கட்டடக்கலை பற்றியோ, வங்கித்துறை செயற்பாடுகள் பற்றியோ நாம் பேச்சுவார்த்தை நடாத்தவில்லை.

மிகச்சிக்கலான இப்பிரச்னை பற்றியும் அதன் விளைவுகள் பற்றியுமே பேசுகிருேம். ஆகவே இப்பிரச்சனைகளில் ஆக்க பூர்வமான ஈடுபாடு கொண்டவர்களும் இதில் தலைமைகளுடன் நல்ல தொடர்பு மேற்கொள்ள கூடியவர்களுமே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும்.

காலை 10-00 மணிக்கு ஹெலிகொப்டரில் வந்து சில மணித்தியாலங்களின் இவர்கள் திரும்பி விடுவர். இப்படியான நிலைமைகளில் சமாதானப் பாதையின் கடினங்களை இவர்கள் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?.

ஹெலிக்கொப்டரில் பறந்து வந்து யாழ்ப்பாணத்தில் தரை இறங்குவோருக்கு கிளாலி பயணத்தின் ஆபத்துக்கள் புரிந்துகொள்ளமுடியாது என்ருர்.

விடுதலைப் புலிகளுக்கும், சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்துக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முழு விபரங்களையும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மக்களின் அன்ருடப்பிரச்னைகளின் முழுமையான விபரங்களையும் தெரிவித்தார்.

மக்களின் அன்ருடப் பிரச்னைகளை அரசாங்கம் நீக்க வேண்டும் என்ருல் அந்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தயார் எனவும் கூறியுள்ளார்.

மேலும் பல்லாயிரக்கணக்கான அரச படையினர் குடாநாட்டைச் சூழவுள்ள முகாம்களில் நிலைகொண்டு சுற்றிவளைப்பு போன்றவற்றில் ஈடுபடுவதாலேயே விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் மீது சந்தேகிக்கவேண்டி ஏற்பட்டது.

அரச படையினுல் மீண்டும் போர் ஒன்று ஆரம்பிக்கும் பட்சத்தில் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அழிவுகள் ஏற்படும்.

மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணமாகவே பூநகரி முகாமை அகற்றும்படி கேட்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

திம்புப் பேச்சுவார்த்தையில் இருந்து பிரேமதாசா பேச்சுவார்த்தை வரை போர்இடைநிறுத்த சம்பவங்கள் மீறப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினர்.

தற்போதைய போர் இடைநிறுத்தம் நிரந்தரமான யுத்த நிறுத்தமாக மாற்றப்படாவிட்டால் உண்டாகக்கூடிய பாரதூரமான விளைவுகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். -६-இ

## சந்திரிகா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தலைவரைப் பற்றிய விவகாரம் எடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும்-இலங்கை அரசுக்கும் இடையில் தொடரும் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னிட்டு எதிர்காலத்திலும் இப்பிரச்னை எழுப்பப்படமாட்டாது என்றும் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் இரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை எதிர்பார்க்கப்பட்டதைவிட அரை மணித்தியாலம் அதிகமாக நீடித்தகாகவும் விடுதலைப்புலிகள் தலைவர் விவகாரம் எழுப்பப்பட்டதாலேயே பேச்சுவார்த்தை நீடித்ததாகவும் ஏஜென்ஸி செய்திகள் ஏற்கனவே தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க-இ

## பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் சில தினங்களில் பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'நரோமா' கப்பலில் வந்து சேருமென்று தெரிவிக்கப்பட்டது. (71-இ)

## அரசு அனுப்பிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதத்தையே விடுதலைப்புலிகள் நிராகரித்து விட்டதாக, வெரித்தாஸ் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் தலைவா திரு வே. பிரபாகரன் அரசுக்கு விதித்த காலக்கெடு இன்று 28ம் திகதியுடன் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(வி-இ)

## பேச்சுக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளன ''

இவ்வாறு, இலங்கை ஜனுதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். ஜனுதிபதி தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்;

இரு நாடுகளுக்குமிடையில் உள்ள அரசியல், கருத்து முரண்பாடுகளினுல் எமக்கு இடையே உள்ள வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பைப் பாதிக்கவிடக்கூடாது என்றும் கூறினுர், (வி-இ)

## ஜனுதிபதி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் இலங்கை ஜனுதிபதி, பங்களாதேஷ் பிரதமர் திருமதி பேகம் காலிதாஸியாவுடன் இரு சுற்றுப் பேச்சுக்களை நடாத்துவார். 30ம் திகதி பிற்பகல் ஜனுதிபதி சந்திரிகாவும் அவர் குழுவினரும் நாடு திரும்புவார்கள்.

இலங்கை ஜனுதிபதி திருமதி சந்திரிகா நேற்று இந்தியாவில, பல பௌத்த சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதுடன் இந்தியாவின் முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி திருமதி சோனியா காந்தியையும், நேற்றும் நேற்று முன்தினமும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் ஜனுதிபதி சந்திரிகாவுடன் கூடச் சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் கருத்துத் தெரிவிக்கையில் ஜனுதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் இரு நாடுகளின் பொருளாதார வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளது என்று கூறினுர். (வி-இ)

## யாழ். மாவட்ட தேர்தல் சரியாக நடைபெறவில்லை

[கொழும்பு]

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டில் இடம்பெற்ற தேர்தல்கள் தேர்தல் விதிகளின்படி நடைபெற்றிருந்தால் நானும் நாடாளுமன்ற உறுப்பினராகியிருப்பேன் என முகைதீன் அப்துல் காதர் இக்பால் தெரிவித்தார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர் சரத் சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கில் இவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்கை ஈ. பி. ஆர். எல். எவ், சுயேட்சைக் குழு ரெலோ, முஸ்லிம் காங்கிரஸ் தனித்தனியாக தாக்கல் செய்ததும் ஒரேவழக்கில் இவை விசாரிக்கட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-இ]

## இன்று

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா என்பதும் தெரிந்ததே.

இன்று யாழ்ப்பாணம் புறப்படவிருந்த இந்தக் குழுவுக்கு ஜனுதிபதியின் அங்கீகாரம் யாழ் புறப்பட கிடைக்கவில்லையென அமைச்சர் தெரிவித்துள்ளளார்.

இதனுல் 4000 கோடி ரூபா செலவில் வடபகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த புனர் நிர்மாணவேலைகள் தாமதமடையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் தமது கோரிக்கைகள் தொடர்பாக அரசுக்கு விதித்து காலக்கெடு இன்று 28-ம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனுல் இந்தக் காலக்கெடுவை அரசு அவ்வளவாக அக்கறையில் எடுத்துக் கொள்ளவில்லை எனவும் பி. பி. சி. தெரிவித்தது.

யாழ் செல்வதற்கு ஜனுதிபதியின் அனுமதி கிடைத்ததும் அங்கு செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் தயாராக இருப்பதாகவும அமைச்சர் விக்கிரமநாயக்கா தெரிவித்தார். (இ)

## பிராந்திய

1ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவுக்குழுவிடம் பிரதி அமைச்சர் சந்திரசேகரன் கேட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன;

நீதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடமே பிரதி அமைச்சர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமைச்சரின் இக்கோரிக்கைகான காரணம் குறித்து பி. பி. ஸி. தெரிவித்ததாவது:

தமிழீழக்கோரிக்கையினுல் இலங்கையில் 1977-ம், 81-ம் 83-ம் ஆண்டுகளில் இனக்கலவரம் ஏற்பட்டது. தமிழீழக் கோரிக்கைகளுக்கும மலைநாட்டு இந்திய வம்சாவழி தமிழர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனுல் மேற்படி இனக்கலவரங்களில் மிகக்கூடுதலாக மலையகத் தமிழர்களே பாதிக்கப்பட்டார்கள்,

ஆகவேதான் இவ்வாருன நிலைமை மீண்டும்ஏற்பட்டால், மலையகமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக தனியான பிராந்திய கமிஷனை நியமிக்கவேண்டும், என்ற கோரிக்கையை அமைச்சர் விடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (வி-இ)

## பாவனையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கப் பாவனையாளர்கள் தமது உலர் உணவு முத்திரை 23பி, 24ஏ (தை கடைசி இரு வாரம் மாசி முதல் இரு வாரம்) திற்குரிய பொருட்களை எதிர்வரும் 31-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. -இ